2014 ஜூலை 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 231, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

231—

சொந்தக் கட்டடம்

***22146—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பின்னத்தூர் மற்றும் ஆலங்காடு அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், பின்னத்தூர் மற்றும் ஆலங்காடு ஆகிய கிராமங்களில் தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கிவரும் நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு, ஒவ்வோர் இடத்திலும் தேவைப்படும் பொருத்தமான 35 சென்ட் நிலம் இனாம் சாசனமாகத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குக் கிடைக்கப்பெறும்பட்சத்தில், அரசு நிதி ஒதுக்கீடு பெற்று கொள்முதல் நிலையம் கட்டித் தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் தனியாரிடம் நெல் விற்பதைத் தவிர்த்து அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு வந்து விற்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். திருத்துறைப்பூண்டி தொகுதி, ஆலங்காடு மற்றும் பின்னத்தூர் ஊராட்சிகளில் செயல்பட்டுவரும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கீற்றுக்*

கொட்டகையால் அமைந்த வாடகைக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு ஆலங்காட்டில் 888 டன் நெல்லும், பின்னத்தூர் ஊராட்சியில் 560 டன் நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

மழைக் காலங்களில் விவசாயிகள் கொண்டுவரக்கூடிய நெல்லைப் பாதுகாக்கமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே, ஆலங்காடு, கோவிலூர், ஜாம்பவனோடை பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளும், பின்னத்தூர் ஊராட்சியைச் சேர்ந்த பின்னத்தூர் (தெற்கு), பின்னத்தூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளும் பயன்பெறும் வகையில் உடனடியாக அந்த இரண்டு இடங்களிலும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையக் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கவேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நடுவர்மன்ற இறுதித் தீர்ப்பை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்து, காவேரிப் பகுதியில் வாழுகின்ற விவசாயிகளையும், விவசாயத்தையும் காத்து நிற்கின்ற தலைவி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி சட்டமன்றத் தொகுதியில் தற்போது 25 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மேலும், திருத்துறைப்பூண்டி தொகுதியில் பிச்சன்கோட்டகம், தில்லைவளாகம், எக்கல், விக்கிரவாண்டியம், நெம்மேலி, குலமாணிக்கம், குறிச்சிமுளை, ஒவர்ச்சேரி, திருக்கடையூர், பாளையூர் மற்றும் வேதபுரம் ஆகிய 11 இடங்களில் தலா 30 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக நெல் கொள்முதல் நிலையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இதுதவிர, விவசாயிகள் அறுவடைக் காலங்களில் ஈரப்பதத்துடன் கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டுவரும் நெல்லை உலர்த்த, கொள்முதல் நிலையங்களிலேயே நெல் உலர்த்தும் களங்கள்

2014 ஜூலை 23]

கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, திருத்துறைப்பூண்டி தொகுதியில் பாண்டிச்சத்திரம், திருத்தங்கூர், அம்மலூர், உப்பூர், மேலப்பெருமலை, குன்னலூர், சித்தமல்லி, புத்தகரம், பெருவிடைமருதூர், கும்மட்டிதிடல், நல்லூர், கோட்டூர், அக்கறைகோட்டகம் மற்றும் மேலப்பனையூர் ஆகிய 14 இடங்களில் நெல் உலர்த்தும் களங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த இரண்டு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு உரிய இடம் தேர்வு செய்யப்பட்ட பின்னர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடி நெல் கொள்முதல் நிலையம் கட்டுவதற்காக திருத்துறைப்பூண்டி நுகர்பொருள் வாணிபக் கழகம் II, நெடும்பளம் மற்றும் விக்கிரவாண்டியம் ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயிகள் இடத்தை வாங்கி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குக் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, அந்த இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டவேண்டும். மேலும், திருத்துறைப்பூண்டி ஒன்றியம், பாமனி ஊராட்சி தோப்படித் தெருவில் அரசுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அங்கே நெல் சேமிப்புக் கிடங்கு ஒன்றைக் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்ட பகுதிகளில் இடம் கொடுக்கும்பட்சத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள்

கட்டுவதற்கு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 232, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

232—

தொழில் வளம்

***25439—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தைத் தொழில் வளம் மிகுந்த மாவட்டமாக உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் சிப்காட் நிறுவனம் ஏற்கெனவே ஒரு தொழில் வளாகத்தினை 492 ஏக்கர் நிலப் பரப்பில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஏற்படுத்தி நிருவகித்து வருகிறது. அதில் 71 தொழிற்சாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இவற்றில் 17 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. மேலும், 21 தொழிற்சாலைகளுக்குக் கட்டுமானப் பணிகள் தொடங்கியிருக்கின்றார்கள் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், தென் மாவட்டங்களில் சிவகங்கை உட்பட பல்வேறு பகுதிகளுக்குச் சலுகைகளை அறிவித்திருக்கின்றார்கள். இன்னும் ஒரு தொழிற்பேட்டை அமைக்க இருக்கின்ற காரணத்தினால், வருங்காலத்தில் சிவகங்கை மாவட்டம் ஒரு தொழில் மாவட்டமாக மாறுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.